# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

### வழக்கு எண். SA 8524/SCIC/2024

Thiru. VIJAYAKUMAR G.DHAS - மேல்முறையீட்டாளர்
New No.10, Old No.5
8th Street, NANDANAM EXTENSION
CHENNAI - 600 035.
Phone:98843 44249.

*/எதிர்/*

The Public Information Officer / - பொது அதிகார அமைப்பு
The Senior Administrative Officer
Avadi Police Commissionerate,
AVADI, CHENNAI - 600 054.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **15.03.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 05.04.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.04.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 02.05.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 27.06.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 15/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ O/o.the Commissioner of Police, Avadi Police Commissionerate, Avadi, Chennai-54 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Sub: Fixing of fair rent for the Office of the Assistant Commissioner of Police, Poonamallee since 04-12-2017 - regarding- Please provide the date of receipt of the above referred letter dated 09-01-2024 and the inward number.” என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Thiru. Vijayakumar G.Dhas அவர்கள் தனது மனைவியுடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.தேன்மொழி, முதுநிலை நிர்வாக அலுவலர், ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி, சென்னை-54 அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 05/04/2024 மற்றும் 02/05/2024 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகவும், மீண்டும் சமீபத்தில் 27/08/2026 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பான நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், தனக்கு அளிக்கப்பட்ட பதில்களில் இனங்கள் 3 மற்றும் 8 ஆகியவற்றிற்கு சரியான பதில்களை அளிக்கவில்லை எனத் தெரிவித்தார். **பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட பதில்கள்/தகவல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இருதரப்பினரின் வாதுரைகளும் கேட்கப்பட்டன. பொதுத் தகவல் அலுவலர்/ முதுநிலை நிர்வாக அலுவலர், ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி, சென்னை-54 அவர்கள் மனுதாரர் கோரியுள்ள இனங்கள் 3 மற்றும் 8 ஆகியவற்றிற்கு, ஆவணங்களின்படியான, முழுமையான தகவல்களையும், அது தொடர்பான ஆவணங்களின் நகல்களையும் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென பணிக்கப்படுகிறார்.**

3. **விசாரணையின் போது மனுதாரர், தனக்கு அனுப்பப்படுகிற கடிதங்களில் “காவல் ஆணையாளருக்காக” எனக் குறிப்பிட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது, இந்நடைமுறை எதன் அடிப்படையில் பின்பற்றப்படுகிறது எனத் தெரிவிக்கக் கோரினார். மனுதாரரின் முறையீட்டினை ஆணையம் பதிவு செய்து கொள்கிறது. அதற்கேற்றவாறு செயல்படுமாறு பொது அதிகார அமைப்புக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8524/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

The Public Information Officer /
The Senior Administrative Officer
Avadi Police Commissionerate,
AVADI, CHENNAI - 600 054.

## மேல்முறையீட்டாளர்

Thiru. VIJAYAKUMAR G.DHAS
New No.10, Old No.5
8th Street, NANDANAM EXTENSION
CHENNAI - 600 035.
Phone:98843 44249.

RG/Sr.PC